(2021-22-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்) (பக்கங்களின் எண்ணிக்கை : 2)

SUBJECT CODE 21 UTM 614

REG.NO

என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) : : பொள்ளாச்சி

பருவ இறுதித் தேர்வுகள் : மே - 2024

பி.ஏ. தமிழ் இலக்கியம் மதிப்பெண்கள் : 70

ஆறாவது பருவம் நேரம் : 3 மணி

## பகுதி – III

## சங்க இலக்கியம் - பத்துப்பாட்டு

### பகுதி – அ (10x1=10 மதிப்பெண்கள்)

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** (K1)

1. மறுஇல் கற்பின் வாணுதல் கணவன்...............

   (அ) அயன் (ஆ) முருகன் (இ) மால் (ஈ) இந்திரன்

2. அறல்போல் கூந்தலும் பிறைபோல் திருநுதலும் கொண்டவள்...........

   (அ) பரத்தை (ஆ) தோழி (இ) பாடினி (ஈ) அகவன்மகள்

3. ‘சிலையுடைக்கையர் கவலைகாப்ப’ எனும் பாடலடி இடம் பெறும் நூல் ——

   (அ) நெடுநல்வாடை (ஆ) குறிஞ்சிப்பாட்டு

   (இ) பட்டினப்பாலை (ஈ) மதுரைக்காஞ்சி

4. புலம்பெயர் மாக்கள் கலந்து இனிது உறையும் பகுதி எது?

   (அ) காவிரிப்பூம்பட்டினம் (ஆ) மதுரை

   (இ) வஞ்சி (ஈ) கொற்கை

5. குறிஞ்சிப்பாட்டு ஆவிரையை எவ்வாறு அடை தந்து சிறப்பிக்கிறது?

   (அ) விரிமலர் (ஆ) தொகுமலர் (இ) கருமலர் (ஈ) செம்மலர்

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளிக்க.** (K2)

6. முருகன் சூரனை எவ்வாறு தடிந்தான்?

7. காவிரி நாட்டு வயல் வளம் எத்தகையது?

8. நாளங்காடியில் விற்கப்பட்ட பொருள்கள் யாவை?

9. அரசனுக்கு அமைந்த பாசறையின் அமைப்பைக் கூறுக.

10. தலைவியும் தோழியும் தினைப் புனத்தை எங்ஙனம் காத்தனர்?

(த.பி.பா.)

*ETHICAL PAPER*

**பகுதி – ஆ** (5 x 4 = 20)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்குவிடையளிக்க.** (K3)

11. அ) முருகனின் இருப்பிடங்களாகத் திருமுருகாற்றுப்படை கூறுவன யாவை?

(அல்லது)

ஆ) முருகன் யானை மீதேறி வருவதைத் திருமுருகாற்றுப்படை எவ்வாறு சித்திரித்துள்ளது?

12. அ) பாலை யாழின் சிறப்பைப் பொருநராற்றுப் படையைக் கொண்டு விளக்கு.

(அல்லது)

ஆ) காவிரியின் வெள்ளச் சிறப்பை முடத்தாமக் கண்ணியார் எங்ஙனம் எடுத்துரைக்கின்றார்?

13. அ) பண்டங்கள் விற்கும் வணிகர்களின் இயல்பை மதுரைக்காஞ்சி சித்திரிக்கும் பாங்கை விளக்குக.

(அல்லது)

ஆ) மதுரைக்காஞ்சி குறிப்பிடும் நாற்பெருங் குழு பற்றி விளக்குக.

14. அ) பாசறையின் இயல்பு குறித்து முல்லைப் பாட்டுக் கூறுவதை விளக்குக.

(அல்லது)

ஆ) பட்டினப்பாலையில் இடம்பெறும் அகப்பொருள் செய்திகளை விளக்குக.

15. அ) அரசியின் அரண்மனை வகுத்தமுறை பற்றி நெடுநல் வாடை கூறுவதை விளக்குக.

(அல்லது)

ஆ) இரவில் தலைவன் வரும் வழியின் அருமையைக் கபிலர் எவ்வாறு வருணித்துள்ளார்?

பகுதி – இ (4 x 10 = 40)

**பின்வரும் வினாக்களில் எவையேனும் நான்கனுக்கு மட்டும் விரிவாக விடையளிக்கவும். வினாஎண்.16க்குக்கண்டிப்பாகவிடையளிக்கவும்.** (K4& K5)

16. திருமுருகாற்றுப் படை விவரிக்கும் முருக வழிபாட்டு மரபு குறித்துக் கட்டுரைக்க.
17. பாடினியின் கேசாதிபாத வருணனையை நும் பாடப்பகுதி வழி விவரித்தெழுதுக.
18. மதுரைக்காஞ்சியின் நுவல் பொருள் குறித்துத் திறனாய்க.
19. முல்லைப் பாட்டில் இடம்பெறும் அகத்திணைச் செய்திகளை விரித்துரைக்க.
20. தோழி அறத்தொடு நிற்கும் நிலையைக் குறிஞ்சிப்பாட்டு வழிப் புலப்படுத்துக
21. கூதிர்க்காலம் நிலைபெற்றமையால் நேர்ந்த விளைவுகளை நெடுநல்வாடை வழி விவரித்துரைக்க.